(Reg. No. 961/1997)

# செய்திமடல்

## நோபல் லாரேட் அன்னை தெரசா சாரிட்டபிள் டிரஸ்ட்

துணை அமைப்பு

## அன்னை தெரசா பேரவை

நெ-.43, நெல்சன்மாணிக்கம் சாலை, சூளைமேடு, சென்னை –600 094
போன்:91-44-23743883 Fax: 91-44-23742699 Web: www.mortherteresacharities.org
Email:motherteresain@yahoo.co.in /mtctindia@yahoo.co.in

**சென்னை, ஜூன் 9, 2010**

பேரன்புடையீர்,

வணக்கம். **அன்னை தெரசா பேரவை**, மற்றும் அதன் தாய் அமைப்பான **அன்னை தெரசா சாரிட்டபிள் டிரஸ்ட்** இன்று இந்தியாவில் பல்வேறு சாதனைகளைப் படைத்து வருவது நமக்கெல்லாம் பெருமை தருவதாகும்.

நமது அறக்கட்டளை சார்பில் **பிரதமர் மன்மோகன்சிங்** அவர்களை அணுகி அன்னை தெரசா அவர்களின் நூற்றாண்டு தினத்தை முன்னிட்டு, அவர் பெயரில் நாணயம் வெளியிட வேண்டும் எனக் கோரிக்கை வைத்தோம் அதை பிரதமர் ஏற்றுக் கொண்டு அன்னை தெரசா பெயரில் **நாணயம் (Commemorative coin) வெளியிட** உத்தரவு பிறப்பித்துள்ளதை தாங்கள் அறிவீர்கள்.

மேலும், இந்தியாவின் அனைத்து **மாநில முதல்வர்கள்/ஆளுநர்களுக்கு** அன்னை தெரசா நூற்றாண்டு விழாவை ஒட்டி, **(1)மாநில தலைநகரில் சிலை அமைக்கவும் (2) மாநில தலைநகரில் மணிமண்டபம் (Memorial Hall) கட்டவும் (3) ஒரு நகருக்கு/பிரதான சாலைக்கு அன்னை தெரசா பெயர் சூட்டவும் (4)அன்னை தெரசா வாழ்க்கை வரலாற்றை பாடத்திட்டத்தில் சேர்க்கவும் மற்றும் (5) அன்னை தெரசா நூற்றாண்டை ஆண்டுமுழுவதும் கொண்டாடவும் கோரிக்கை வைக்கப்பட்டது.**

பல்வேறு மாநில முதல்வர்கள் /ஆளுநர்கள் நமது கோரிக்கையை ஏற்று துரித நடவடிக்கை எடுத்து வருவதாகவும் கடிதம் அனுப்பி இருக்கிறார்கள் டில்லி முதல்வர் **திருமதி. ஷீலா தீட்சித் அவர்கள்** தலைநகர் டில்லியில் அன்னை தெரசா அவர்களுக்கு சிலை அமைக்கவும், மணிமண்டபம் கட்டவும் ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

தற்போது "**அன்னை தெரசா நூற்றாண்டு விழாவையும் நாணயம் வெளியிடும் விழாவையும்** கலகத்தாவில் இயங்கிவரும் அன்னை தெரசா அவர்கள் தோற்றுவித்த **மிஷனரிஸ் ஆப் சாரிட்டி** மற்றும் நமது **மதர் தெரசா**

**சாரிட்டபிள் டிரஸ்ட்** ஆகிய இரு அமைப்புகளும் இணைந்து நடத்துமாறு மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. இதற்கான பணியினை கல்கத்தாவிலுள்ள **மிஷனரிஸ் ஆப் சாரிட்டியுடன்** இணைந்து நம் **அன்னை தெரசா பேரவை** நிர்வாகிகள் துவக்கியுள்ளார்கள் என்பதனை பெரும் மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்விழா வருகிற 26.8.2010 அன்று கலகத்தாவில் நடைபெறவுள்ளது. இவ்விழாவிற்கு குடியரசு தலைவர் **திருமதி. பிரதிபா பட்டில், பாரதபிரதமர் மாண்புமிகு Dr. மன்மோகன்சிங்** அவர்களும், மத்திய அமைச்சர்கள் மாநில முதல்வர்கள், ஆளுநர்கள் மற்றும் சிறப்பு பிரதிநிதிகள் அழைக்கப்படவிருக்கிறார்கள்.

இதேபோல் அன்னை தெரசா நூற்றாண்டு விழாவை அனைத்து மாநில தலைநகர்களிலும் மாநில அரசுகள் மற்றும் பல்வேறு அமைப்புகளுடன் இணைந்து நடத்துமாறு நமது "**அன்னை தெரசா பேரவை**" நிர்வாகிகள் கோரப்பட்டுள்ளார்கள்.

மேலும், அன்னை தெரசா பிறந்த தினமான **ஆகஸ்ட் 26–ம் நாளை** மத்திய அரசு " **தேசிய ஆதரவற்றோர் தினமாக**" அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கையை வைத்துள்ளோம். உள்துறை அமைச்சர் **மாண்புமிகு பா.சிதம்பரம்** அவர்களிடம் நேரடியாக இதற்கான மனுகொடுக்கப்பட்டுள்ளது. இந்த கோரிக்கை மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

அதைப்போல அன்னை தெரசா பிறந்த தினத்ததை "**உலக ஆதரவற்றோர் தினம்** " என அறிவிக்க **ஐக்கிய நாடுகள் சபை (UNO)** யையும் நேரடியாகவும் மத்திய அரசு முலமாகவும் அணுகியுள்ளோம். மத்திய அரசும் அதற்கான பணிகளை மேற்கொண்டுள்ளது என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் ஒரு மகிழ்சியான செய்தி ஐக்கிய நாடுகள் சபை (UNO) ன் ஒரு அங்கமான UNESCO (United Nations Educational Scientific cultural Organization- ஐக்கிய நாடுகளின் அறிவியல் பண்பாட்டு கல்வி நிறுவனம்) தீர்மானம் எண்.45 (9)–ல்............... "*Mother Teresa left a testament of unshakable faith, invincible hope and extraordinary charity as a "Mother of the poor". She became a living symbol of compassion to the world, and a living witness to the thirsting love of God. Mother Teresa's message is in fully accordance with the UNESCO constitution, and this celebration in 2010 will be a good opportunity to explain to young generations, her message of compassion, tolerance, mutual respect, solidarity and peace. The commemoration of this anniversary would help to further disseminate globally Mother Teresa's Universal message.* என தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. வருகிற

**26.8.2010** அன்று நடைபெறும் துவக்க விழா நிகழ்ச்சிகளில் இவ்வமைப்பையும் இணைத்து செயல்பட முயற்சி எடுத்து கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்பதனை தெரிவித்துக்கொள்கிறேன்.

இனி நாம் செய்ய வேண்டியபணிகள் ஒவ்வொரு மாநிலத்திலும் அன்னை தெரசா பேரவையின் செயல்பாடுகளை விரிவுபடுத்தி அது அடிதளத்து மக்களுக்கு சென்று சேருமாறு செயல்படுத்தவேண்டும்.

நம் தமிழகத்தில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 10,000 உறுப்பினர்கள் சேர்ப்பது என இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மாவட்ட, வட்டார, மற்றும் கிராம கமிட்டிகள் அமைக்கவும் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. தற்போது பல மாவட்டங்களில் செயல் வேகம் இல்லாத நிர்வாகிகளை மாற்றி, செயல்திறன்மிக்க, சமுக சேவையில் ஆர்வம் உள்ள தோழர்கள் அன்னை தெரசா பேரவையில் இணைய ஆவன செய்யுமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

அகில இந்திய அளவில் பம்பாயை சார்ந்த தொண்டுள்ளம் படைத்த **திரு. ரால்ப்மேனன்** என்பவர் அகில இந்திய தலைவராக நியமிக்கப்பட விருக்கிறார். பிற நிர்வாகிகளும் விரைவில் கண்டறியப்பட்டு நியமிக்கப்பட விருக்கிறார்கள். தேசிய அளவிலும், மாநில, மாவட்ட அளவிலும் திறம்பட செயல்பட முன்வரும் தன்னார்வ தோழர்களை கண்டறிந்து தலைமை அலுவலகத்தற்கு தெரிவிக்க வேண்டுகிறேன்.

தலைநகர் டில்லியில் நமக்கு ஒரு அலுவலகம் ஏற்படுத்தவும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் வருகிற **26.8.2010** முதல் **25.8.2011** வரையிலான ஓராண்டு காலத்தை பட்டிதொட்டியெல்லாம் கொண்டாட முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

வருகிற **26.8.2010** அன்று கலகத்தாவில் நடைபெறும் நூற்றாண்டு துவக்க விழாவில் கலந்து கொள்ள முன்வரும் நபர்களின் பெயர்களை நமது தலைமை அலுவலகத்தில் தொடர்புகொண்டு வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி,

**"Service to mankind is Service to God"**

அன்புடன்,

**ஜி.கே.தாஸ்**
மேனேஜிங் டிரஸ்டி